4th November 1958]

கொடுக்கக்கூடிய விலைவாசிகளை வைத்துக்கொண்டு புள்ளி விவரங்களை தயாரிப்பது சர்க்காருக்கு தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன். இதுபோன்று தயாரிப்பது முறையா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பொதுவாக குற்றம் சாட்டினுல் அதை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏதாவது ஒரு அதிகாரியைப்பற்றி குறிப்பாக எடுத்துச் சொல்லி புகார் சொல்லக் கூடிய தகவல் இருந்தால் அதை என்னிடம் எழுதிக் கொடுக்கும்படியாக கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI M. JAGANNATHAN : May I know, Sir, whether the Government will come forward to compile index numbers for more places than the six mentioned in the statement placed on the table of the House?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not think it is necessary. These six places cover fairly the entire State.

Statistics about lands under cultivation.

* 827 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் உள் விவகாரா அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

இம்மாகாணத்திலே (1) நஞ்செய் பூமி, (2) தோட்டக்கால் பூமி, (3) புஞ்செய் பூமி ஆகியவைகளிலே ஒவ்வொரு இனத்திலும் எத்தனை எத்தனை ஏக்கராக்களில் இப்பொழுது வெள்ளாண்மை செய்யப்பட்டு வருகின்றது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A statement[a] is placed on the table of the House.

SRI P. G. MANICKAM : மேஜையில் மீது வைக்கப்பட்டிருக்கிற புள்ளி விவரங்கள் 1955–56-க்கு எடுக்கப்பட்டிருப்பதாக தெரிய வருகிறது. 1955-ம் வருஷத்திற்குப் பிறகு அநேகம் புஞ்சை பூமிகள் நஞ்சை பூமிகளாக மாற்றப்பட்டிருக்கின்றன. ஏனென்ருல் பல அணைக் கட்டுகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆகையால் நஞ்சை பூமி விஸ்தீர்ணம் அதிகமாகி இருக்கலாம். ஆகவே 1958-ம் வருஷத்திய புள்ளி விவரங்களை எடுத்து இந்த சபை மேஜையின் மீது வைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : 1955–56-க்குப் பிறகு அதிகப்படியான புஞ்சை நிலங்கள் நஞ்சையாக மாற்றப்படவில்லை என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : நஞ்சை, புஞ்சை, தோட்டக்கால் இவைகளைத் தவிர புறம்போக்கு தரிசு நிலங்களையும் வெள்ளாண்மை செய்ய சர்க்கார் முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதிலும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. அவைகளை சாகுபடிக்குக் கொண்டு வருவது என்பது சுலபம் அல்ல. சேலம் ஜில்லா ஆத்தூரில் சுமார் முப்பது ஆயிரம் ஏக்கருக்கு மேலுள்ள நிலத்தை நிலமில்லாதவர்களுக்கு வெள்ளாண்மைக்காகக் கொடுக்கப்படுகிருக்கிறது. அவற்றில் வெள்ளாண்மை செய்ய முடியாத நிலைமையில் இருக்கிருர்கள். அவைகளைப் பற்றியெல்லாம் பரிசீலனை செய்ய வேண்டியதாக இருக்கிறது.

---

[a] Printed as Appendix IV on page 585 infra.